# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 130 /பேரூ/2026**
**நாள் : 03.09.2026**

L. பாலமுரளி,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, இராமன்நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவரது 13.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.05.2026 அன்று பெறப்பட்டு, 130/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, இராமன்நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 13.05.2026 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பிரிவிற்கு முகவரியிட்ட 12.03.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மேட்டூர் வட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) ரூ.1.73 கோடி மதிப்பீட்டிலும், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (NSMT) ரூ.3.33 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் கலைஞர் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (KNMT) ரூ.3.44 கோடி மதிப்பீட்டிலும் எம். ராஜேந்திரன் என்ற ஒப்பந்ததாரர் சாலை மற்றும் வடிகால் பணிகளை செய்ய ஒப்பந்தம் (Tender) எடுத்திருந்தார். இவர் பல பகுதிகளில் பணிகளை Tender Scheduleல் உள்ளபடி செய்யாமல் பணியை முடித்ததாக கூறி பில் பணம் பெற்றுள்ளார். மேலும் ஒப்பந்த பட்டியலில் உள்ள வார்டு பகுதிகளை அப்பகுதி கவுன்சிலரையும், அந்த வார்டு தெருவில் உள்ள பொதுமக்களையும் கொண்டு பணி முடிக்கப்பட்டதா என்று ஆய்வு செய்ய வேண்டும். ஆனால் அந்த பணிகளை ஒப்பந்த பட்டியலில் உள்ளபடி (tender)படி செய்து முடிக்காமல் பேரூராட்சியில் பில் தொகை பெற்றுள்ளார். இதற்கு பேரூராட்சியில் உள்ள இளநிலை

பொறியாளரும், நிர்வாக அதிகாரியும் உடந்தையாக செயல்பட்டனர். இதனை ஆய்வு செய்து அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 21.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 89/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திரு. L. பாலமுரளி என்பவரது புகார் மனுவில் சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் திரு. எம். ராஜேந்திரன் என்ற ஒப்பந்ததாரர் TURIP, NSMT மற்றும் KNMT ஆகிய திட்டங்களில் பல கோடி ரூபாய்க்கு ஒப்பந்த பணிகளை எடுத்து பணிகளை சரிவர செய்து முடிக்காமல் உள்ளதாகவும் இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு இப்பேரூராட்சி அலுவலக இளநிலை பொறியாளர் தல ஆய்வு அறிக்கையினை பின்வருமாறு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

<u>தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் (TURIP)</u>

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டத்தில் (TURIP) 2வது வார்டு பெருமாள்கோவில் தெரு மற்றும் குஞ்சாண்டியூர் புதுக்காலனி பகுதி, 3வது வார்டு டி.சி.எம். காலனி பகுதி, 5வது வார்டு ஆர்.சி. பிளாண்ட் எதிரில் உள்ள பகுதி, 6வது வார்டு இரட்டைபுளியமரத்தூர், 8வது வார்டு ராமன்நகர் பகுதி, 9வது வார்டு சுப்ரமணியநகர் பகுதி மற்றும் 10வது வார்டு புதுச்சாம்பள்ளி-2 பகுதி, 11வது வார்டு பச்சைமணியக்காரார் தெரு பகுதி, 12வது வார்டு ஜீவா நகர் மற்றும் 13வது வார்டு புதுச்சாம்பள்ளி-1 ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை பராமரித்தல் பணியினை ரூ.173.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது 07.06.2023 நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 8500/2023/ஆ5 நாள் 07.06.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கான மதிப்பீட்டிற்கு பேரூராட்சிகளின் இயக்கக கண்காணிப்பு பொறியாளர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 8500/2023/ஆ5, நாள் 19.06.2023ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 232/2022, நாள் 17.07.2023 மூலம் 01.08.2023ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களது தொழில்நுட்ப உறைகள் மதிப்பீடு செய்யப்பட்டதில், திரு.எம். ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், தொப்பூர் என்பவர் சமர்ப்பித்துள்ள தொழில்நுட்ப உறை தகுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடித ந.க.எண். 232/2022 நாள் 11.08.2023 மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மேற்படி பணியானது ஒப்பந்ததாரால் மதிப்பீட்டின்படி திட்டமிடப்பட்ட அளவில் (schedule quantity) செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்காக பயன்படுத்தப்பட்ட சிமெண்ட், ஜல்லி, எம்.சேண்ட், தண்ணீர் மற்றும் பணித்தலத்திலிருந்து எடுக்கப்பட்ட கான்கிரீட்டிற்கான கியூப் டெஸ்ட் ஆகியவைகள் 03.10.2023ஆம் தேதியில் தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி கட்டடவியல் துறை பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் அவர்களால்

30 சதவீதத்திற்கான சோதனை சரிபார்ப்பு (test check) 01.09.2024ஆம் தேதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைகளின் அடிப்படையில், இப்பணியினை 06.12.2024ஆம் தேதியில் மூன்றாம் நபரால் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கை பெறப்பட்டு, இப்பணிக்கான பணி முடிவறிக்கை சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் 09.01.2025ஆம் தேதியில் பெறப்பட்டு, இப்பணிக்காக நாளதுவரை விடுவிக்கப்பட்டுள்ள 90 சதவீத அரசு மானியத் தொகை மட்டுமே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளோ, நிதியிழப்போ ஏற்படவில்லை என்பதையும், மேற்படி பணி முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு, பணிகள் யாவும் முறையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

<u>நகர்ப்புற சாலைகள் மேம்பாடு திட்டம் (NSMT)</u>

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாடு திட்டத்தில் (NSMT) 3,4,6,7,8,10,11,12,13,14 மற்றும் 15 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள 109 சிமெண்ட் சாலைகள் மேம்பாடு செய்தல் பணியினை ரூ.333.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 9705/2023/ஆ5, நாள் 24.07.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கான மதிப்பீட்டிற்கு பேரூராட்சிகளின் இயக்கக கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 9705/2023/ஆ5 நாள் 03.08.2023ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 247/2023, நாள் 16.08.2023 மூலம் 19.09.2023ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களது தொழில்நுட்ப உறைகள் மதிப்பீடு செய்யப்பட்டதில், திரு. எம். ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், தொப்பூர் என்பவர் சமர்ப்பித்துள்ள தொழில்நுட்ப உறை தகுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 347/2023 நாள் 25.09.2023 மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மேற்படி பணியானது ஒப்பந்ததாரரால் மதிப்பீட்டின்படி திட்டமிடப்பட்ட அளவில் (schedule quantity) செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்காக பயன்படுத்தப்பட்ட சிமெண்ட், ஜல்லி, எம்.சேண்ட், தண்ணீர் மற்றும் பணித்தலத்திலிருந்து எடுக்கப்பட்ட கான்கிரீட்டிற்கான கியூப் டெஸ்ட் ஆகியவைகள் 03.10.2023 மற்றும் 25.10.2023 ஆகிய தேதிகளில் தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி கட்டடவியல் துறை பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்றுகள் பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் அவர்களால் 30 சதவீதத்திற்கான சோதனை சரிபார்ப்பு (test check) 23.12.2023 மற்றும் 16.03.2024 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைகளின் அடிப்படையில், இப்பணியினை 06.12.2024ஆம் தேதியில் மூன்றாம் நபரால் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கை பெறப்பட்டு, இப்பணிக்கான பணி முடிவறிக்கை சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் 09.01.2025ஆம் தேதியில் பெறப்பட்டு இப்பணிக்காக நாளதுவரை விடுவிக்கப்பட்டுள்ள 90 சதவீத அரசு மானியத் தொகை மட்டுமே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் எவ்வித முறைகேடுகளோ நிதியிழப்போ ஏற்படவில்லை என்பதையும் மேற்படி பணி முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு, பணிகள் யாவும் முறையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பணி நடைபெறுவதை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 07.04.2024ஆம் தேதியில் தல ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் (KNMT)</u>

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தில் (KNMT) 2,3,5,6,7,8,9,10,11,13,14 மற்றும் 15 ஆகிய வார்டு பகுதியில் 7.467 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.344.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 9436/2023/ஆ4, நாள் 11.08.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கான மதிப்பீடு பேரூராட்சிகளின் இயக்கக கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 9436/2023/ஆ4, நாள் 18.08.2023ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 374/2023, நாள் 07.09.2023 மூலம் 12.10.2023ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களது தொழில்நுட்ப உறைகள் மதிப்பீடு செய்யப்பட்டதில் திரு. எம். ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், தொப்பூர் என்பவர் சமர்ப்பித்துள்ள தொழில்நுட்ப உறை தகுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 374/2023, நாள் 16.10.2023 மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மேற்படி வடிகால் பணிகளுக்கு TUFIDCO நிறுவன மாநில தரக் கண்காணிப்பாயர் (திட்டம்) (state quality monitor (scheme) அவர்களின் கூர்ந்தாய்வில் வடிகால் பணிக்கான ஆழம் 50 செ.மீ. அளவில் மட்டுமே இருக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீட்டில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணியினை ஒப்பந்ததாரர் செயல்படுத்தும்போது 1) 8வது வார்டு முருகன் நகர் பகுதி மற்றும் ராமன்நகர் பகுதி 2) 7வது வார்டு சக்திநகர் பகுதி, 3) 5வது வார்டு ஆர்.சி.பிளான்ட் எதிர்புறம் மற்றும் முருகன் கடை வீதி 4) 2வது வார்டு குஞ்சாண்டியூர் புதுக்காலனி மற்றும் பெருமாள்கோவில் வீதி, 5) 9வது வார்டு மின்நகர் பகுதி, 6) 14வது வார்டு குருவாக்காடு பகுதி, 7) 11வது வார்டு பச்சைமணியக்காரர் தெரு பகுதி, 8) 3வது வார்டு டி.சி.எம். காலனி பகுதி மற்றும் மூலக்கடை வீரக்கல்புதூர் பேரூராட்சி எதிர்புறம், 9) 15வது வார்டு பிள்ளையார் கோவில் தெரு பகுதி, 10) 10வது வார்டு சாம்பள்ளி மெயின்ரோடு பகுதி, 11) 13வது வார்டு புதுச்சாம்பள்ளி பகுதி ஆகியவைகளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் கழிவுநீர் வெளியேறுவதற்காக Disposal point அமைந்துள்ள இடத்தினை இணைக்கும் வகையில் 50 செ.மீ. ஆழம் என்ற அளவில் மேற்கொள்ள வழிவகை இல்லாததாலும், சில இடங்களில் சாலை மட்டத்திற்கு கீழ் சுமார் ½ அடி ஆழத்திற்கு கீழ் வடிகால் அமைந்திருந்ததாலும் கூடுதலாக 10 செ.மீ. ஆழம் சேர்த்தும், 10 செ.மீ. நீளத்திற்கு வடிகாலின் உயரத்தினை உயர்த்தியும் மொத்தமாக 60 செ.மீ. அளவில் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 14வது வார்டு குருவாக்காடு தெருவிளக்கு மின்கம்பம் எண். 37 அமைந்துள்ள பகுதியில் மட்டும் சாலை மட்டத்திலிருந்து 2 அடி உயரத்திற்கு கீழாக பழுதடைந்த சிறு வடிகால்கள் இருந்ததால் கூடுதலாக 55 செ.மீ. உயர்வு செய்து சாலை மட்டத்திற்கு வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வடிகால் பணி மேற்கொள்ளப்படும் இடங்களில் ஏற்கனவே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த கல்வெட்டுக்கள் உயரம் குறைவாகவும், கழிவுநீர் இருபுறங்களிலும் வெளியேற வழியின்றி தேங்கி பொதுமக்களுக்கு இடையூறாக இருந்த 1) குஞ்சாண்டியூர் மாரியம்மன் கோவில் எதிரில், 2) பெருமாள் கோவில் வீதி, 3) குஞ்சாண்டியூர் புதுக்காலனி, 4) சின்னமாரியம்மன் கோவில் தெரு (2 எண்ணிக்கை) 5) மற்றும் 6) சாம்பள்ளி மெயின்ரோடு (5 எண்ணிக்கை), 7, தம்பியண்ணன் தெரு, 8) சுப்ரமணியநகர் பெயர் பலகை அருகில், 9) சௌடேஸ்வரியம்மன் கோவில் தெரு, 10) குருவாக்காடு (3 எண்ணிக்கை) ஆகிய 17 இடங்களில் புதியதாக கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பணிக்காக பயன்படுத்தப்பட்ட சிமெண்ட், ஜல்லி, எம்.சேன்ட், தண்ணீர் மற்றும் பணித்தலத்திலிருந்து எடுக்கப்படட கான்கிரீட்டிற்கான கியூப் டெஸ்ட் ஆகியவைகள் 03.10.2023 மற்றும் 25.10.2023 ஆகிய தேதிகளில் தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி கட்டடவியல் துறை பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்றுகள் பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் அவர்களால் 30 சதவீதத்திற்கான சோதனை சரிபார்ப்பு (test check) 07.11.2023, 18.05.2024 மற்றும் 18.08.2024 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைகளின் அடிப்படையில், இப்பணியினை 06.12.2024ஆம் தேதியில் மூன்றாம் நபரால் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கை பெறப்பட்டு, இப்பணிக்கான பணி முடிவறிக்கை சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களால் 29.04.2025ஆம் தேதியில் பெறப்பட்டு இப்பணிக்காக நாளதுவரை விடுவிக்கப்பட்டுள்ள 90 சதவீத அரசு மானியத் தொகை மட்டுமே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பணியினை மேற்கொள்ளும்போது மேற்காணும் விவரப்படி கழிவுநீர் வெளியேறுவதற்கான Disposal point இணைப்பதற்கான பணி, சாலையின் உயரத்திற்கு வடிகாலினை உயர்த்தும் பணி மற்றும் கூடுதல் கல்வெட்டுகள் அமைக்கும் பணிகள் பொதுமக்களின் நலன் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவையினை கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்பட்டதால் இப்பணிக்கான மதிப்பீட்டின்படி குறிப்பிட்ட நீளத்திற்கு பணி செய்ய இயலவில்லை என தெரிய வருகிறது.

இதில் எவ்வித முறைகேடுகளோ, நிதியிழப்போ ஏற்படவில்லை என்பதையும் மேற்படி பணி முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு பணிகள் யாவும் முறையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி புகார் மனுவானது மனுதாரரால் உள்நோக்கத்தோடு பேரூராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் போடப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி புகார் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் இவ்வலுவலக இளநிலை பொறியாளரது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே திரு. L. பாலமுரளி என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுவானது முற்றிலும் பொய் புகார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 19.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. L. பாலமுரளி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டில்
  - (i) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் (TURIP) திட்டத்தின் கீழ் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளுக்கும்,
  - (ii) நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) திட்டத்தின் கீழ் ரூ.3.33 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளுக்கும்,
  - (III) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) திட்டத்தின் கீழ் ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணிகளுக்கும் ஒப்பந்ததாரர் திரு. M. ராஜேந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - (iv) ஆனால் கீழ்க்காணும் பணிகள் நடைபெறவில்லை.

(1) TURIP திட்டத்தின் கீழ் 5வது வார்டில் ஒப்பந்த அட்டவணைப்படி 5 இடங்களுக்கு சாலை அமைக்க பணி ஆணை வெளியிடப்பட்டதில் 4 வேலைகள் மட்டும் முடிக்கப்பட்டு மீதமுள்ள 1 பணியான 430 மீட்டருக்கு சாலை அமைக்கப்படவில்லை.

(2) NSMT திட்டத்தின் கீழ் 7வது வார்டில் சக்தி நகர் பகுதியில் 2 பணி வேலைகளில் 1 பணி மட்டும் செய்யப்பட்டு மீதமுள்ள 1 பணிக்கு சாலை அமைக்கப்படவில்லை

(3) TURIP திட்டத்தின் கீழ் 8வது வார்டு ராமன் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 பணிகளில் 3 மட்டும் முடிக்கப்பட்டு 1 பணி மேற்கொள்ளப்படவில்லை.

(4) 8வது வார்டில் NSMT திட்டத்தின் கீழ் ராமன் நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 5 பணிகளில் எந்த பணியும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படவில்லை.

(5) TURIP திட்டத்தின் கீழ் 12வது வார்டில் உள்ள ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 3 பணிகளில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

(6) NSMT திட்டத்தின் கீழ் 12வது வார்டில் ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 பணிகளில் எவ்வித பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே நான் புகாராக தெரிவித்துள்ள மேற்காணும் விடுபட்டுள்ள சாலைப் பணிகளை பேரூராட்சியின் நிர்வாகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோர் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- ‘‘சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் (TURIP) திட்டத்தின் கீழ் ரூ.1.73 கோடி மதிப்பீட்டிலும் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) திட்டத்தின் கீழ் ரூ.3.33 கோடி மதிப்பீட்டிலும் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) திட்டத்தின் கீழ் ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணிகளுக்கும் பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டும் உரிய ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. M, ராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

- மனுதாரர் இன்று நடைபெற்ற விசாரணையின்போது தெரிவிக்கப்பட்ட புகார்களுக்கு கீழ்க்கண்டவாறு எங்களது வாக்குமூலத்தை சமர்ப்பிக்கிறோம்:

  (1) TURIP திட்டத்தின் கீழ் 5வது வார்டில் ஒப்பந்த அட்டவணைப்படி ஒப்பந்ததாரர் திரு. எம். ராஜேந்திரன் என்பவரால் 5 இடங்களுக்கும் சாலை பணிகள் முழுவதுமாக மேற்கொள்ளப்பட்டு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

  (2) NSMT திட்டத்தின் கீழ் 7வது வார்டில் சக்தி நகர் பகுதியில் ஒதுக்கப்பட்ட 2 சாலை பணிகள் முழுவதும் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

  (3) TURIP திட்டத்தின் கீழ் 8வது வார்டு ராமன் நகர் பகுதியில் 4 சாலை பணிகளும் எவ்வித விடுதலின்றி முழுமையாக அமைக்கப்பட்டுள்ளன.

  (4) 8வது வார்டில் NSMT திட்டத்தின் கீழ் ராமன் நகரிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய 5 சாலைப் பணிகளும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டது.

  (5) TURIP திட்டத்தின் கீழ் 12வது வார்டில் உள்ள ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 3 சாலைப் பணிகளும் ஒப்பந்ததாரரால் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

  (6) NSMT திட்டத்தின் கீழ் 12வது வார்டில் ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 சாலைப் பணிகளும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மேற்காணும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளுக்கு தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி கட்டடவியல் துறையால் தரச்சான்று பெறப்பட்டும் மற்றும் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் செயற்பொறியாளரால் சோதனை சரிபார்ப்பு (test check) செய்யப்பட்டும், மேலும் மூன்றாம் நபரால் பணி தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது.

- மேற்காணும் பணிகள் அனைத்தும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, செலவினங்களும் மன்ற ஒப்புதல் பெற்று மனுதாரர் திரு. L. பாலமுரளி (வார்டு எண்.7) என்பவரும் ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

எனவே மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சாலைப் பணிகளில் எவ்வித விடுதலின்றி முழுமையாக பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 2023–24ஆம் ஆண்டில் TURIP திட்டத்தின் கீழ் 5வது வார்டில் 5 இடங்களுக்கு சாலை அமைக்க பணி ஆணை வழங்கியதில், 4 இடங்களுக்கு மட்டும் சாலை அமைக்கப்பட்டு 430 மீட்டர் பரப்பளவான 1 இடத்திற்கு சாலை அமைக்கப்படவில்லை எனவும், 8வது வார்டு ராமன்நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 சாலை பணிகளில் 3 பணிகள் மட்டும் முடிக்கப்பட்டு 1 பணி மேற்கொள்ளப்படவில்லை எனவும் மற்றும் 12வது வார்டு ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 3 சாலை பணிகளில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை எனவும்,

அதேபோன்று, NSMT திட்டத்தின் கீழ் 7வது வார்டு சக்தி நகரில் 2 பணிகளில் 1 மட்டும் செய்து, மீதமுள்ள 1 சாலை பணி அமைக்கப்படவில்லை எனவும் மேலும் 8வது வார்டு ராமன்நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 5 பணிகளில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மற்றும் 12வது வார்டில் ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 சாலை பணிகளில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மனுதாரர் திரு. L. பாலமுரளி தெரிவித்திருப்பதை அவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மனுதாரர் விசாரணையின்போது, சாலை பணிகள் அமைக்கப்பட்டதில், சில சாலைகளில் சாலை பணி மேற்கொள்ளப்படாமல் நிலுவையாக உ.ள்ளது என்கிற புகாருக்கு, TURIP திட்டத்தின் கீழ் 5வது வார்டில் ஒதுக்கப்பட்ட 5 இடங்களுக்கும், 8வது வார்டு ராமன்நகர் பகுதியில் 4 சாலைப் பணிகளும் மற்றும் 12வது வார்டில் ஜீவா நகரில் 3 சாலைப் பணிகளும் எவ்வித விடுதலின்றி ஒப்பந்த அட்டவணைப்படி முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், அதேபோன்று NSMT திட்டத்தின் கீழ் 7வது வார்டு சக்தி நகர் பகுதியில் ஒதுக்கப்பட்ட 2 சாலைப் பணிகள், 8வது வார்டு ராமன்நகரில் 5 சாலைப் பணிகள் மற்றும் 12வது வார்டு ஜீவா நகரில் 4 சாலைப் பணிகளும் எவ்வித விடுதலின்றி முழுமையாக மேற்கொள்ளப்பட்டு மூன்றாம் நபரால் தரச் சான்று பெறப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

**இந்நிலையில், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 2023-24ஆம் ஆண்டில் TURIP திட்டத்தின் கீழ்**

(i) வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 5வது வார்டில் 430 மீட்டர் பரப்பளவில் சாலை அமைக்கப்படவில்லை;

(ii) 8வது வார்டு ராமன்நகர் பகுதியில் 4 சாலைப் பணிகளில் ஒரு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை;

(iii) 12வது வார்டில் அமைந்துள்ள ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 3 சாலை பணிகளில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை என மொத்தம் 5 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ள நிலையிலும்;

(மற்றும்)

**2023-24ஆம் ஆண்டில் NSMT திட்டத்தின் கீழ்**

(i) வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 7வது வார்டு, சக்திநகர் பகுதியில் இரண்டு சாலைப் பணிகளில் ஒரு சாலைப் பணி மேற்கொள்ளப்படவில்லை;

(ii) 8வது வார்டு ராமன் நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 5 சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை;

(iii) 12வது வார்டு, ஜீவா நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய 4 சாலை பணிகளில் மேற்கொள்ளப்படவில்லை என மொத்தம் 10 சாலைப் பணிகள் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ள நிலையில் ;

மேற்காணும் பணிகள் அனைத்தும் எவ்வித விடுதலின்றி முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அக்குழு மூலம் நேரடியாக கள ஆய்வு செய்து, அதன் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. L. பாலமுரளி,
5/2-57B, முருகன் நகர் , இராமன்நகர் அஞ்சல்,
மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8/9/26
செயலாளர்
08/9/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032